IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No289/2014
DEPOSITION OF WITNESS

வா.சா.1 சாட்சி அயோத்தி  த.பெ.ராசுத்தேவர்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif on 11.06.2026 in accordance with the provisions of Act XX141.**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு  விசாரணை தொடர்சி :

1. தாவா சொத்து சர்வே எண். 66/1 ல் 6 ஏக்கர் 36 செண்டு என்றால் எனது இடம் சர்வே எண். 66/1 கிடையாது. சர்வே எண். 66/1ல் 6 ஏக்கர் 36 செண்டு எனது தகப்பனார் பெயரில் பட்டா வழுங்கப்பட்டுள்ளது என்றால் சர்வே எண். 66/1Aல் 25 செண்டுக்கு சக்கரசிவனாண்டி, கரந்தமலை மற்றும் எனது பெயரில் உள்ளது. சர்வே எண். 66/1A ல் 10 ஏர்ஸ், சர்வே எண். 66/2Aல் 64.4 ஏர்ஸ், சர்வே எண். 66/5 ல் 25.5 ஏர்ஸ், சர்வே எண். 64/1J ல் 22.5 ஏர்ஸ் ஆகியவை மேற்படி 3 பேர்களின் பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

2. மேற்படி சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றால் எனது தந்தை கிரையம் வாங்கிய சொத்தாகும். வழக்கிற்காக பூர்விக சொத்தை கிரைய சொத்து என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. கடந்த 07.01.1976ல் எனக்கு வீரணத்தேவர் மகன் குருசாமிதேவர் என்பவர் சர்வே எண். 66/1 ல் 6 ஏக்கர், 36 செண்டு மேல்புறம் என் பாகம் 3 ஏக்கர், 18 செண்டு என்று ஒத்தி வைத்தார் என்றால் சரிதான். மேற்படி ஒத்தி பத்திரத்தில் கிழ்புறம் எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். மேற்படி கீழ்புறம் உள்ள சொத்து 3 ஏக்கர் 18 செண்டு எனக்கு பாத்தியம் என்றால் சரிதான்.

3. பி.வா.சா.ஆ4 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து என்றால் சரிதான். தாவா சொத்து அடங்கிய சர்வே எண். 66/3B கீழ்புறம் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 66/3A மேற்புறம் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 66/3A என்பது சர்வே எண். 66/3B ஐ காட்டிலும் உயரமாக உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 66/3A என்பது இந்த வழக்கின் 1ம் பிரதிவாதியான குருசாமிதேவர் என்பவர் பெயரில் பட்டா இருந்த விபரத்தை எப்போது தெரிந்துவந்தேன் என்றால் UDR நிலவுடமை மேம்பாட்டு திட்டத்தின் போது தெரிந்துகொண்டேன். குருசாமி பெயரில் உள்ள பட்டாவை எனது பெயருக்கு பட்டா மாற்றகோரி கடந்த 05.09.1986 ல் திருமங்கலம், தனி தாசில்தார் அவரிடம் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி மனுவின் அடிப்படையில் கடந்த 10.09.1986 ல் விசாரணைக்கு ஆஜராக இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி நோட்டிஸ் அனுப்பியுள்ளனர் என்றால் சரிதான். மேற்படி நோட்டிஸ் பி.வா.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. பி.வா.சா.ஆ. 10 ஆவணமானது பரிவர்த்தனை ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் சர்க்கரை, எனது கையெழுத்து, கரந்தமலை ஆகியோர் கையெழுத்து உள்ளன என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்தபோதுதான் எனக்கு குருசாமி பெயரில் பட்டா மாற்றியுள்ள விபரம் தெரியவரும் என்று கூறியுள்ள விபரம் தெரியவரும் என்றால் சரிதான். சர்வே எண். 66/3A என்பது 1ம் பிரதிவாதி பட்டா மாற்றி அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான்.

5. மேற்படி விபரத்தை எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா பரிகாரமானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே என்றால்

சரியல்ல. சொத்து வேண்டும் என்றுதான் தாக்கல் செய்துள்ளேன். பிராதில் சொத்து வேண்டும் என்ற பரிகாரம் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து இந்த வழக்கின் 1ம் பிரதிவாதிக்கு நானும், எனது சகோதரர்கள் சர்க்கரை, கரந்தமலை ஆகிய மூவரும் சேர்ந்து பி.வா.சா.ஆ. 10 ஆவணத்தை எழுதிகொடுத்துள்ளதாலும், மேலும் மேற்படி சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்டுள்ளதாலும், தாவா சர்வே எண். 66/3Aல் எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு வழக்கு சொத்தின் சர்வே எண். 66/3B ஐ பொறுத்து வாதிக்கு பரிகாரம் வழங்க எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்றால் தெரியாது.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.06.11 09:49:15 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருமங்கலம்.